வரி வரியாய் உங்கள் நினைவுகள் எல்லாம்
வரிசையாய் எம்முள் வருகிறதே
ஒருமனமாக உமைத்தொழுதிடவே வழியின்றி இதயம் அழுகிறதே 2
ஒரு சுடர் கூட எரியாதா உம்மை தொழவும் உரிமை கிடையாதா
சரி பிழை சொல்ல சமத்துவாம் இல்லை
சாந்தி செய்யவும் முடியவில்லை
உம்மை ஏந்திக் கொள்ளவும் தெரியவில்லை

துளி துளியாய் எங்கள் விழி சிந்தும்
ஒவ்வொரு துளியும் உமக்காக
நாம் வழி வழியாய் உம்மை எதிர்பார்க்கும்
ஒவ்வொரு கணமும் உமக்காக
நீங்கள் வீழ்ந்தது எமக்காக இன்று
நாங்கள் வாழ்வது உமக்காக
கனவுகள் வருவது எதர்க்காக உங்கள்
நினைவுடன் வாழும் எமக்காக
உங்கள் நினைவுடன் வாழும் எமக்காக

நிறை நிறையாய் உங்கள் நினைவாக
நெய்விழக்கேற்றும் நாள் வருமா
நாங்கள் விடுதலையாய் இங்கு வாழ்வதற்கு
இனிவரும்காலம் கை தருமா
நீங்கள் வீழ்ந்தது எமக்காக இன்று
நாங்கள் வாழ்வது உமக்காக
கனவுகள் வருவது எதர்க்காக உங்கள்
நினைவுடன் வாழும் எமக்காக
உங்கள் நினைவுடன் வாழும் எமக்காக

வரி வரியாய் உங்கள் நினைவுகள் எல்லாம்
வரிசையாய் எம்முள் வருகிறதே
ஒருமனமாக உமைத்தொழுதிடவே வழியின்றி இதயம் அழுகிறதே
வரி வரியாய் உங்கள் நினைவுகள் எல்லாம்
வரிசையாய் எம்முள் வருகிறதே

இசைதட்டு : தோன்றி
புதிப்பகம் : அகம்